## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 277/2014 | Date : 09.03.2023 | PW1 |
| --- | --- | --- |
| Name: மதியழகன் | S/o. **அபிமன்னன்** | Evidence Recorded Time: 03.36 P.M. to 03.46 P.M |

**1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

தாவா சொத்து கமலா என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கமலா, ரத்தினம், செல்வராஜ், சேகர், குமார் ஆகியோர் தங்கராஜ் என்பவருடன் சேர்ந்து 29.06.2012-ல் ஒரு பவர் பத்திரம் 1-ம் பிரதிவாதி சேட்டுக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் நானும் சேட்டுவும் சேர்ந்து 26.11.2012-ல் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூபாய் ஐந்து லட்சத்திற்கு கிரையம் பேசி ரூபாய் நான்கு லட்சம் முன்பணமாக கமலாவின் பவர் ஏஜெண்ட் என்ற வகையில் சேட்டு வசம் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தின் காலம் இரண்டு ஆண்டுகள் என்றால் சரிதான். 2 முதல் 6 பிரதிவாதிகளின் குடும்ப சூழ்நிலை காரணமாக கிரைய பத்திரம் எழுதுவதற்கு காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரிதான். என்னிடம் வாங்கிய கிரைய முன்பணத்தை சேட்டு கமலாவிடம் கொடுத்தது எனக்கு தெரியும். தங்கராஜ் இறப்பிற்கு பின்னிட்டு 2 முதல் 6 பிரதிவாதிகள் கிரைய ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யவரவில்லை என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2 முதல் 6 பிரதிவாதிகளின் சம்மதம் இல்லாமல் சேட்டு கிரையபத்திரம் எழுதிக்கொடுக்க முடியவில்லை என்றால் சரிதான். பவர் பத்திரத்தை சேட்டுக்கு தெரியாமல் 2 முதல் 6 பிரதிவாதிகள் தன்னிச்சையாக ரத்து செய்துவிட்டார்கள் என்று எனக்கு தெரியும். அந்த பவர் பத்திரத்தை ரத்து செய்து விட்டு 2 முதல் 5 பிரதிவாதிகள் ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விவரம் சேட்டுவிற்கு இந்த வழக்கிற்கு பின்புதான் தெரியவந்தது என்றால் சரிதான். சேட்டு 2 முதல் 6 பிரதிவாதிகளிடம் சென்று கிரையம் செய்து தரக்கேட்டபோது அவர்கள் கிரையம் செய்து தர மறுத்துவிட்டார்கள். சேட்டுவுக்கு எழுதிக்கொடுத்த பவர் ரத்து செய்யப்பட்டதால் அவர் மீது எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. சேட்டுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(3 முதல் 6 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.